Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 30
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 28 முஹறம் 14 வெள்ளிக்கிழமை (12-3-71)

நவநாகரிக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன 444
தந்தி. 'ஜெந்தினம்ஸ்'
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# இந்தியா இந்திராவுக்கு

# தமிழகம் தி. மு. க. கையில்!

## 'சின்டிகேற்' பெருந்தலைவர்கள் படுதோல்வி





இந்தியாவின் ஆட்சியை அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையை ஜக ஜீவன்ராம் தலைமையிலான திருமதி இந்திராகாந்தியின் காங்கிரஸ் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் திரு மு. கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றியீட்டி ஆட்சிப் பொறுப்பை மீண்டும் கைப்பற்றியிருக்கிறது

'சின்டிகேற்' கூட்டணி பெருந்தலைவர்கள் எல்லாம் படு தோல்வியடைந்திருக்கிறார்கள், தமிழ் நாட்டில் முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி உட்பட தி.மு.க. அமைச்சர்கள் சகலரும் வெற்றி பெற்றுள்ளார்கள்.

தமிழ் நாட்டில் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த 'சின்டிகேட்' கருத்திருமன், ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட சின்டிகேற் சஞ்சீ ரெட்டி சுதந்திரா தலைவர் என் ஜி. ரங்கா இந்திரா காங்கிரசை படுமோசமாகத் தாக்கி வந்த சின்டிகேற திருமதி தாரகேஸ்வரி சின்ஹா, லோகசபை எதிர்கட்சி தலைவராக இருந்த சின்டிகேற் ராம் சுபாக்சிங் சின்டிகேட் எஸ்.என். மிஸ்ரா போன்ற பெருந்த தலைகளெல்லாம் படுதோல்வியடைந்துள்ளார்கள்

## லோகசபை

### கட்சி நிலைவரம்

கடைசிப்பார்வை

| | |
|---|---|
| வெளிவந்த முடிவுகள் | 359 |
| இந்திரா காங்கிரஸ் | 273 |
| காமராஜ் காங்கிரஸ் | 15 |
| ஜனசங் | 21 |
| சுதந்திரா | 05 |
| இ.கம்யூனிஸ்ட் | 12 |
| பிரஜா சோஷலிஸ்ட் | 01 |
| சுயேச்சை | 31 |
| முஸ்லிம்லீக் | 02 |
| மாக்ஸிய கம்யூ | 04 |
| பாரதகிராந்தி | 01 |
| சம்யுக் சோஷ | 03 |

## தி. மு. க. அமைச்சர்கள் பெரும் வெற்றி

தமிழக முதல்வர் கருணாநிதி சைதாப்பேட்டையில் 12 ஆயிரத்துஐந்நூறு அதிகப்படி வாக்குகளால் வென்றிருக்கிறார்- கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன், ஹரிஜனநல மந்திரி திருமதி சத்தியவாணிமுத்து, கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சி பா ஆதித்தனார். நிதி அமைச்சர் திரு கே ஏ மதியழகன், அறநிலைப் பாதுகாப்பு அமைச்சர் கே வி சுப்பையா. அமைச்சர்கள் மாதவன், ரமன், வேழவேந்தன். சாதிக்பாஷா சண்முகம் ஆகியோரும் பெரும் வெற்றியீட்டியுள்ளார்கள்- தி மு க பிரச்சாரப் பீரங்கி 'புரட்சி நடிகர்' எம் ஜி ராமச்சந்திரன் பரங்கிமலைத் தொகுதியில் அமோக வெற்றிபெற்றுள்

(6-ம் பக்கம் பார்க்க)

## துரையப்பாவின் காருக்கு வெடிகுண்டு!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத் தொகுதியில் நடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட திரு அல்பிரட் துரையப்பாவின் காடுக்கு நேற்று இரவு வெடிகுண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது

யாழ்ப்பாண பிரதானவீதியில் உள்ள பிரிமியர்கபேக்கு அருகாமையில் நேற்று இரவு 8-30க்கு இச்சம்பவம் நடைபெற்றது

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு சட்டசபை கட்சி நிலைவரம்

| | |
|---|---|
| வெளிவந்த முடிவுகள் | 167 |
| தி. மு. கழகம் | 138 |
| சின்டிகேட் காங்கிரஸ் | 08 |
| சுதந்திரா | 5 |
| இ. கம்யூனிஸ்ட் கட்சி | 02 |
| பி. சோஷலிஸ்ட் | 02 |
| போர்வார்ட் புளக் | 04 |
| விவசாயிகள் சங்கம் | 01 |
| முஸ்லிம் லீக் | 04 |
| சுயேச்சை | 02 |
| தமிழரசு கழகம் | 1 |

## முழுமனதுடன் ஏற்றிருக்கிறார்கள்!

### மக்கள் தீர்ப்புபற்றி இந்திரா

புதுடில்லி மார்ச் 11

எனது கட்சியின் கொள்கைகளை மக்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டார்கள் என்பதையே இத் தேர்தல்முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன [illegible] பத்திரிகையாளர் தேர்தல் முடிவுகள்பற்றி பிரதமர் இந்திராவிடம் வினவிய பொழுது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏழை மக்களின் வாழ்வை [illegible] கட்சி எடுத்து வந்திருக்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நான் நம்பியிருப்பது கடவுளை மட்டுந்தான் நான் மனிதரை நம்பும் காரணமாவது எனக்கு கடவுளிடம் நம்பிக்கையிருப்பதே. — மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 28ந் திகதி (12-3-71)


## இந்தியாவின் தீர்ப்பு

இந்தியத் தேர்தலில் இதுவரை கிடைத்த முடிவுகளிலிருந்து திருமதி இந்திராகாந்தியின் தலைமையிலான காங்கிரஸ் கட்சியே மீண்டும் இந்தியாவை ஆட்சி புரியுமென்பதும் தமிழ்நாட்டில் திரு மு. கருணாநிதி தலைமையிலான திராவிடமுன்னேற்றக் கழகமே ஆட்சிபீடத்திற்கு வருமென்பதும் தெளிவாகியிருக்கிறது.

மனிதனுக்கு இதயம் இடதுபக்கத்திலிருப்பதால் இடதுபக்கத்தைத் தான் மக்கள் சாருவார்கள் என்று மறைந்த மேதை பண்டித நேரு கூறியதை இந்திய மக்கள் இந்த இடைத்தேர்தலில் நிரூபித்திருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும்.

திருமதி இந்திராகாந்தியின் வெற்றி இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகிலேயே உண்மையான ஜனநாயக ஆட்சியை விரும்புபவர்களுக்குக் கிடைத்த வெற்றியென்றே கூறவேண்டும்.

இம்முறை இந்தியத் தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றபோதிலும் வாக்காளப்பெருமக்கள் திடமனம் இழக்காமலும் வன்முறைக்குப் பணியாமலும் தங்கள் வாக்குகளை அளித்திருக்கிறார்கள் என்பதை எவரும் ஏற்றுக்கொண்டாகவேண்டும்.

அகில இந்திய ரீதியிலும் தமிழ்நாட்டிலும் கிடைத்துள்ள வெற்றி ஜனநாயகத்துக்குக் கிடைத்த ஜனநாயகத்துக்கு கிடைத்த பெருவெற்றியாக இருந்தாலும் வெற்றிப் பெருமிதம் காரணமாக சில நாடுகளில் சில தலைவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் கொள்ளும் பழிவாங்கும் மனப்பான்மை ஏற்படக் கூடாது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திராவிடமுன்னேற்றக்கழகத்தின் வெற்றி இலருக்குப் பொறுமையையும் பொச்சரிப்பையும் ஏற்படுத்தக்கூடும். ஆனாலும் தமிழ்நாட்டு மக்கள் தாங்கள் நன்றியுள்ளவர்கள் என்பதை இத் தேர்தலில் காட்டியிருக்கிறார்கள்.

பண பலத்தால் எதையும் சாதித்துவிட முடியாதென்பதற்கும் இந்தியத் தேர்தல் முடிவுகள் உதாரணமாக விளங்குகிறது.

இலங்கையும் சோஷலிஷப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கே விரும்புகிறது. இந்தியாவும் இதையே விரும்புகிறது என்பதை இந்த இடைத் தேர்தல் தெளிவாக்கியிருக்கிறது.

இந்திய மக்களும் இலங்கை மக்களும் ஒரே விதமான மனப்பான்மையைக் கொண்டிருப்பதால் இலங்கையும் இந்தியாவும் பல விஷயங்களில் ஒத்துழைக்க முடியும். தமிழ்நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு இங்கு வீணை பீதிகொள்ளாமல் அவர்களின் நட்புறவைப் பெறுவதே விவேகமாகும்

## 'பென்ஷன்வழங்கும் திட்டத்தை அமுல் நடாத்துக'

யாழ்ப்பாணம், வெள்ளி

இளைப்பாறும் ஒவ்வொரு உப தபால் அதிபர்களுக்கும் உடனடியாகப் பென்ஷன் வழங்கும் திட்டம் ஒன்றை உடன் அமுல்நடத்தக் கோரி உடுவில் எம் பி திரு. தர்மலிங்கம் பிரதம மந்திரியை அவசரத் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

இந்த அரசாங்கம் ஏழைகளுக்காக உழைத்துவருவதாகச் சொல்லிக்கொள்ளுகிறது. ஆனால் கடந்த அரசாங்கத்தினால் தட்டிக் கழிக்கப்பட்ட உப தபால் அதிபர்களின் பென்ஷன் திட்டத்தைச் சரிவர அமுல் நடாத்தினால் செயலிலும் அது சோஷலிஸக் கொள்கையைக் கைக்கொள்ளுகிறதென மக்கள் நம்புவதற்கு இடம் ஏற்படுமென அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

எல்லா உப தபால் ஊழியர்களும் இந்தக் கொள்கை சம்பந்தப்பட்ட ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் மூலம் பிரதம மந்திரியைக் கேட்டுக் கொள்வதென்ற உப அஞ்சல் அதிபர்கள் சங்கம் செய்துகொண்ட முடிவுக்கு ஏற்பவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட அயர்லாந்தில்

### 3 பிரி. சிப்பாய்கள் சுட்டுக் கொலை

பெல்பாஸ்ட், மார்ச் 11

வட அயர்லாந்தில் நேற்று மூன்று பிரிட்டிஷ் சிப்பாய்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையில் நெடுங்காலமாகவே பூசல் நிலவிவருகின்றது. இதன் காரணமாக எழுந்துள்ள நிலைமையைச் சமாளிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் ராணுவத்தை அங்கு அனுப்பியிருக்கிறது.

### 3000 பேர் வேலைநிறுத்தம்

கோட்டை, வியாழன்

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்பிரிங் வெலிகுரூப்பைச் சேர்ந்த 3000 வேலையாட்கள் திடீரென வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர் வாரத்துக்கு 6 நாள் வேலையும் வயதுவந்த பிள்ளைகளுக்குத் தோட்டத்தில் வேலையும் வழங்கவேண்டும் எனக்கோரியும் இவர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்

### அண்ணாவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் சிரேஷ்ட மாணவர் மன்றம் அண்ணாவுக்கு அஞ்சலி விழா எடுத்தது. திருவாளர்கள் மு. ஆலாலசுந்தரம் ம. க. அந்தனிசில் ஆகியோர் உரையாற்றினர்.

## 'தருமப் பணத்தை தவறாக பயன்படுத்த விடாதீர்கள்'

பருத்தித்துறை, வியா

நோய்வாய்ப்பட்டு முதுமையடைந்து எவ்வித வருமானமுமற்ற ஏழைமக்களுக்கு மாதவீதம் அளிக்கப்படவேண்டிய அற்பதொகையான தருமப்பணம் தவறான பாதையிற் சென்று தகுதியற்றவர்களைச் சேர்வது தடுக்கப்படவேண்டும். இன்றைய நிலையில் ஓர் ஏழை இறந்தபின்னரே இன்னோர் ஏழைக்குத் தருமப்பணம் கிடைக்கக்கூடியதாயுள்ளது. இந்நிலையில் தருமப்பணம் பெறத்தகுதியற்றார்களுக்கு இதுவரை அப்பணம் கொடுக்கப்பட்டிருந்தால் அது திருப்பி அறவிடப்படல் வேண்டும்'

இவ்வாறு உடுப்பிட்டிக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கே. எஸ். சிதம்பரநாதன் வடபகுதி அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவுக்கு சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அம்மகஜர் கூறுவதாவது: தருமப்பணம் வழங்குவதற்கான சிபாரிசு விடயம் கிராமசேவகரிடம் மட்டும் விடுவதிலும் பார்க்க பொதுநிலையங்களுக்கும் அதிற் பங்கு கொடுக்கப்படல் வேண்டும் தவறான முறையில் தருமப்பண விண்ணப்பங்களைச் சிபார்சு செய்யும்கிராமசேவகர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும்.

## 'கலையும், விஞ்ஞானமும் இணைபிரியாதவை'

பருத்தித்துறை, வியாழன்

"கலையும் விஞ்ஞானமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்போல இணைபிரியாதவை மனித வாழ்வுக்கு இரண்டும் அவசியமானவை. ஒன்று மனிதனின் உலகியல் தேவைகளைப் பூர்த்திசெய்வதுபோல, மற்றது அவனது ஆத்மீக வளர்ச்சிக்கு உதவுகிறது."

இவ்வாறு நேற்று முன்தினம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் நடைபெற்ற கனிஷ்ட பாடசாலைகளுக்கான ஓவியக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசிய வடமாநில உதவிக் கல்வியதிபதி திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளை கூறினார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:

"யாழ்நூலைத் தமிழ் உலகுக்கு அளித்த விபுலனந்த அடிகள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி என்பதை நாம் உணரவேண்டும் பாடசாலைகளில் கலை, விஞ்ஞானப் பிரிவுகளுக்கிடையில் சுவர் அமைப்பதுபோல நம் வாழ்விலும் சுவர்எழுப்பக்கூடாது எமது ஓய்வுநேரத்தை செம்மையாகக் கழிக்கக் கலை உதவுகிறது.

பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. நவரத்தினமும் பேசினர்.

......

மாணவர்கள்

### சைவசமய உட்பொருளை அறியவேண்டும்'

மாவிட்டபுரம், வியாழன்

'உலகிலுள்ள பல்வேறு சமயங்களுள் சைவசமயமே பழைமைவாய்ந்தது. மற்றைய சமயங்களில் இல்லாத எத்தனையோ சிறந்த அம்சங்கள் எமது சைவ சமயத்திலே உள்ளன. ஆகவே மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக வாழவேண்டுமானால் சைவசமயத்தின் உட்கருத்துக்களை அறிந்து சமய வாழ்வு வேண்டும்'

இவ்வாறு காங்கேசன்துறை நடேசஸ்வராக்கல்லூரியில் இந்து இளைஞர் சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய ஆசிரியர் திரு. ப. சுப்பையா கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், மாணவர்களிடையே இன்று சமயப்பற்று அருகி வருகிறது. இந்நிலை நீடிக்குமானால் எமது சமயமே அழியும் அபாயநிலை உருவாகும். ஆகவே மாணவர்கள் சமயத்தைக் கட்டிக்காத்து வளர்த்தால்தான் அவர்கள் சிறந்தவர்களாக திகழ்வதோடு சமயமும் வளர்ச்சியடையும்.

மற்றெல்லா சமயத்தையும் விட சைவ சமயத்தில் ஒரு சிறந்த அம்சம் உண்டு. அது எம்மதமும் சம்மதம் என்பதாகும். இந்த அம்சத்தை மற்றெந்த சமயத்திலும் காணமுடியாது. ஆகவே மாணவர்கள் எதிர்காலத்தில் நல்லவர்களாக நேர்மையுள்ளவர்களாக திறமைசாலிகளாக திகழ்ந்து தமது வாழ்க்கையைச் சிறப்பாக அமைக்கவிரும்பினால் கட்டாயம் சமய நம்பிக்கை ஏற்படவேண்டும்' என்றார்.

மற்றும் பண்டிதர் க. சுந்தையா உட்படப் பலர் பேசினர்கள்

### முதலிடம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மேற்கு யாழ்ப்பாணம்ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சுப்போட்டியில் நயினாதீவு மகாவித்தியாலய மாணவிகளான செல்வி, நா சரசலெட்சுமி மேற்பிரிவிலும், செல்வி ந ஞானசௌந்தரி என்பவர் மத்தியிலும் முதலிடம் பெற்றன.

### தோட்டத்தில் கஞ்சாச் செடி ரூ 100 அபராதம்

மாவிட்டபுரம், வியா.

புன்னாலைக்கட்டுவனில் உள்ள மூத்ததம்பிகுருசாமி என்பவர் தமது தோட்டத்தில் புகையிலையுடன். 34 கஞ்சாச் செடிகளையும் பயிரிட்டு வைத்திருந்ததை சுன்னாகம் பொலிஸ் அதிபர் பி. இராசேஸ்வரன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி கண்டுபிடித்தது.

தோட்டக்காரரைப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது வவனியாவிலிருந்து எடு வாங்கியதாகவும், அவ்வெரு இத்தோட்டத்துக்கு இடப்பட்டதாகவும் அதன் மூலம்இச்செடி முளைத்திருக்கலாமெனவும் ஒரு சாதிமிளகாய்ச் செடிஎன முதலில் நினைத்ததாகவும் பின் ஒரு சாதி செவ்வந்தியாக இருக்கலாம் என நினைத்ததாகவும் கூறினார்.

100 ரூபா அபராதம் விதி[illegible] ...ார்.

### என். எம். முக்கு வரவேற்பு

ஊர்காவற்றுறை, வியா.

ஊர்காவற்றுறையில் இலங்கை வங்கிக் கிளையைத் திறந்துவைப்பதற்காக தீவுப் பகுதிக்கு விஜயம்செய்யவிருக்கும் நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவை வரவேற்குமுகமாக புளியங்கூடலில்ஒரு பொதுக்கூட்டம் நிகழ இருக்கின்றது இலங்கை சமசமாச வாலிபர் சங்க புளியங்கூடல் கிளையினர் இதற்கான ஒழுங்குகளை செய்துவருகின்றனர்.

## 'நல்லசந்ததியை உருவாக்குபவர்'

உரும்பராய், வியா.

"நாட்டிலே நல்ல சந்ததியை உருவாக்குபவர்கள் ஆசிரியர்களே அவர்களை நல்லமுறையில் பேணவேண்டியது அரசாங்கத்தினதும் மக்களதும் கடனாகும், பாராட்டுக்குரிய ஆசிரியர்களுள் திரு. ஜே. ஐ. தம்பிஐயா எல்லாரது உள்ளங்களையும் கவர்ந்த உத்தமமானவர்".

ஆவரங்கால் எம். எம். பாடசாலைத் தலைமையாசிரியராய் இருந்து ஓய்வுபெற்ற திரு ஜே ஐ. தம்பிஐயாவுக்கு மேற்படி நடந்த உபசார விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய கோப்பாய் எம். பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலைத்தலைமையாசிரியர் திரு. பொ. வேலும்மயிலும் பழைய தலைமையாசிரியரின் சேவையைப் பாராட்டிப் பேசியதுடன் பொன்னாடை போர்த்திக் கௌவிரத்தார்.

'உயர்ந்த பாடசாலைகள் வரிசையில் ஆவரங்கால் மெதடிஸ்த் மிஷன்பாடசாலையின் பெயரைப் பொறித்த பெருமை இவரையே சாரும் இவரின் நல்ல முயற்சிகளுக்கு தற்போதையதலைமையாசிரியர்திரு. பொ வேலும்மயிலும் உட்பட உதவியாசிரியர்கள் அனைவரும் நல்ல பெருமுயற்சியோடு கூடிய ஒத்துழைப்பை நல்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. என்று வலி-கிழக்குத் தமிழாசிரிய சங்கக் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் க. இ. குமாரசாமி, சு. முருகேசு, ம. க. நடராசா, வே. இளையகுட்டி உட்படப்பலர் உரையாற்றினர்கள்.

### பட்டிமன்றம்

மாவிட்டபுரம், வியாழன்

'கும்பகர்ணனும்விபீஷணனும் நேர்மையாளர்கள்' என்ற தலைப்பில் இன்று காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் ஒரு பட்டிமன்றம் நடைபெறுகிறது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களும் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர்களும் இப்பட்டிமன்றத்தில் கலந்துகொள்வர்.

### வேலைவாய்ப்புப்பெற அடையாள அட்டைகள்

கோட்டை, வியா

அடையாள அட்டைகள் இல்லாத எவரும் தனியார் அரசாங்கத்துறைகளில் வேலைவாய்ப்புப்பெற இயலாது என்பதை வற்புறுத்தும் புதியதொரு வேலைவாய்ப்புச் சட்டம் வரவிருக்கிறது.

காணிநியோகம் குறித்து விசாரணை செய்வதற்காக காணி விவசாய அமைச்சினால் நியமிக்கப்பட்ட கமிட்டி செய்த சிபார்சை ஒட்டியே மேற்படி சட்டம் வரலாம்என எதிர்பார்க்கப்படுறது,

அரசாங்கம் இந்நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் அடையாள அட்டைகளை விரைவில் வழங்கவேண்டுமென மேற்படி கமிட்டியின் தலைவர் திரு ரோனி டி மெல் அரசாங்கத்தைக்கேட்டுள்ளார்,

### கி. ச. உப தலைவர்

சுழிபுரம் வியாழன்

காரைநகர் தெற்கு கிராம சபையின் புதிய உப தலைவராகத் தோப்புக்காடு வட்டார உறுப்பினர் திரு. க. வீரகத்திப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஷேக் முஜிபுர் ரஹ்மானை சந்திக்க பூட்டோ. கிழக்குப்பாகிஸ்தான் செல்கிறர்

## சட்ட மறுப்பு இயக்கம் தொடர்கிறது

டாக்கா,மார்ச்.11

கிழக்குப்பாகிஸ்தானில் ஷேக்முஜிபுர்ரகுமான் ஆரம்பித்த சட்டமறுப்பு இயக்கம் தளர்ச்சியடையாமல் நடைபெற்று கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரகுமான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் காரணமாக எழுந்துள்ள நிலைமை குறித்து மேற்குப் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் திரு. சுல்பிகார் அலி பூட்டோ பெரிதும் கவலை கொண்டிருக்கிறர். கிழக்குப் பாகிஸ்தானுக்குப் போய் ஷேக்குடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும் அவர் விருப்பம் தெரிவித்திருக்கிறர்.

மேற்குப்பாகிஸ்தானுக்கும் கிழக்குப்பாகிஸ்தானுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையான நிலைமையை சீர்படுத்தும் வகையில் கிழக்குப் பாகிஸ்தானுக்குப் போய் அவாமி லீக் தலைவர் ஷேக்முஜிபுர் ரகுமானைச் சந்தித்துப்பேச திரு பூட்டோ விருப்பம் தெரிவித்திருக்கிறர். இதே வேளையில் ஷேக் முஜிபுர்ரகுமான் ஆரம்பித்த சட்டம் மறுப்பு இயக்கம் மும்முரமாக நடைபெற்று வருகின்றது. கடந்த பத்து நாட்களாக சட்ட மறுப்பு இயக்கம் நடைபெற்று வருகின்றது. அரசாங்க அலுவலகங்கள் முடங்கிக் கிடக்கின்றன. நீதி மன்றங்கள் இயங்கவில்லை. விமானப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்துள்ளன. மக்கள் வரிகொடா இயக்கத்தைத் தொடர்ந்து நடத்திவருகிறர்கள்.

கிழக்குப் பாகிஸ்தானில் முற்றாகவே அவாமி லீக் தான் ஆட்சியை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்காக அதிபர் யாஹ்யாக்கான் கவர்னருக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைக்க கிழக்குப் பாகிஸ்தான் நீதிபதிகள் மறுத்து விட்டனர். இதன் காரணமாக அதிபர் யாஹ்யாக்கான் கிழக்குப் பாகிஸ்தானுக்கும் போவார் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

## வேல் ஆனந்தன் குழுவினர்க்கு அமைச்சர் குமாரசூரியர் பாராட்டு

வெள்ளவத்தை, வியாழன்

'பரதநாட்டியம் ஒரு தெய்வீகக்கலை எமது நாட்டில் பரதக்கலையைப் பேணி வளர்க்கவேண்டும் அருவமாய் இருக்கும் கடவுள் இங்கு ஆனந்த சொரூபியாகக் காணப்படுகிறர். காலைத்தூக்கி நின்ருடும் தெய்வமே என்று பாடி வைத்தார்கள். காலனைக் காலால் உதைத்த இந்த நடராஜனின் திருத்தாண்டவத்தை கலைஞர் வேல் ஆனந்தன் இங்கு சிறப்பாக்கி கலைத்துவம் மிளிரச் செய்துகாட்டினர்'

இவ்வாறு தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 'கலைக்கோவில்' வேல் ஆனந்தன் குழுவினரின் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்

அகில இலங்கை இளம் நடிகர் சங்கம் நடாத்திய இந் நிகழ்ச்சியில் அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது:-

உண்மையான பரதக் கலையை முறையோடு ஆடுபவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரை அறிமுகப்படுத்திய இளம் நடிகர் சங்கத்தினரை நான் பாராட்டுகிறேன். இதே உற்சாகத்துடன் இவர்கள் தொடர்ந்து பணியாற்றவேண்டு.'

இளம் நடிகர் சங்கச் செயாளரும் விழா அமைப்பாளருமான திரு எஸ்

(5-ம் பக்கம் பார்க்க)

மாவை ஆலய தேர் தீ வைப்பு வழக்கு:

## 'தேருக்கு தீவைத்துவிட்டு ஓடுவதாகச்சப்தமிட்டேன்'

மாவிட்டபுரம்,வியா

தேருக்குத் தீ வைத்துவிட்டு 1-ம் எதிரி ஓடுவதாக நான் சத்தமிட்டேன். அப்போது பொன்னுச்சாமி ஐயர் வளவுக்குள் நின்றுஓடி வந்து 1-ம் எதிரியின் இடுப்பில் பிடித்தார் என்று மாவை ஆலயதேர் தீவைப்பு வழக்கில் சாட்சியமளித்த செ. சண்முகவடிவேல் கூறினர்.

மகிலாகம் நீதிபதி எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாவை ஆலய இரு தேர்களை தீவைத்து நஷ்டம் விளைவித்ததாகவும் செ.சண்முகவடிவேல் எஸ். பொன்னுச்சாமி ஐயர் ஆகியோருக்கு அடித்து காயம் விளைவித்ததாகவும் குற்றஞ் சாட்டி சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ் ரி. என். நாகரத்தினம் பளையைச் சேர்ந்த எஸ். மகேஸ்வரன், மட்டுவிலைச் சேர்ந்த எஸ். இராசையா ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களாக வழக்கறிஞர் ஆர். இ. தம்பிரத்தினமும் ஆர் ஜே செல்வரத்தினமும் ஆஜராகி சாட்சியை குறுக்கு விசாரணை செய்தனர். ஆலயத்தின்சார்பில் அட்வகேட் வி. சுந்தரலிங்கம்ஆஜராகிஇருந்தார். குறுக்கு விசாரணையின்போது சாட்சி சண்முகவடிவேல் கூறியதாவது.

வழ: எத்தனைதேர் நின்றது? 5 தேர்.

வழ: என்னஎன்ன தேர்? பிள்ளையார் சிவன், சுப்பிரமணியர். ஆறுமுகசாமிசண்டேசுவரர் தேர்கள்.

வழ: எரிந்தது எத்தனை தேர்

வழ: எது எது எரிந்தது? ஆறுமுகசுவாமி, சண்டேசுவரர் தேர்கள்.

வழ: எரிந்த தேர்களுக்கு எங்கே மற்றைய தேர்கள் நின்றன? வரிசையாக

வழ: தேர்தீவைக்கப்படும் போது எங்கே நின்றீர்? ஆறுமுகசாமி தேருக்கு 5, 6 அடி தூரத்தில்.

வழ: முதல் எந்தப்பக்க தட்டியில் தீ பற்றியது? வடக்குப்பக்க தட்டியில்.

வழ: முழுத் தட்டியும் எரிந்ததை கண்டீரா? இல்லை

வழ: வடக்குப்பக்க தட்டியின் அடியில் இருந்து எரிந்தது என்பது பொய்? இல்லை எரிந்ததைக் கண்டேன்.

வழ: முதலாம்எதிரி என்ன உடுப்புடன் நின்ருர்? பட்டு வேட்டிசால்வையுடன்

வழ: பொன்னுச்சாமி ஐயர் 1-ம் எதிரியை என்ன செய்தார்? கண்ணைப் பொத்தி அடித்து இடுப்பில் பிடித்து இழுத்துப் போனர்

வழ: 1-ம் எதிரியின் சால்வை கழன்றதை கண்டீரா? இல்லை

வழ: 2-ம் எதிரி என்ன உடுப்புடன் நின்ருர்?வேட்டி சேட், சால்வை:

வழ: 2-ம் எதிரியை முதல் முதல் எங்கே கண்டீர்? மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய கிழக்குவீதியில் உள்ள கிணற்றடியில் இருந்து கோவில் பக்கம் செல்லும் போது கண்டேன்-

வழ: பின் எப்போது கண்டீர்? தேருக்கு தீவைக்கும் போது தேர்முட்டிக்கும் தேருக்குமிடையில் 1-ம்எதிரியுடன் கண்டேன்.

வழ: பின்எப்போது கண்டீர்? பின்னால் நின்று 2-ம் எதிரி என் முதுகில் கல்லால் அடிக்கும்போது கண்டேன்.

வழ: பின் அவர்கள்என்ன செய்தனர்? இருவரும் வீதியால் ஓடினர்கள்

வழ: நீர் என்ன செய்தீர் நாகரத்தினம் தீ வைத்துவிட்டு ஓடுவதாகசத்தம் இட்டேன்.

வழ: பொன்னுச்சாமி ஐயர் எங்கேயிருந்து வந்தார்?- தன் வளவுக்குள் கிணற்றடியில் நின்று ஓடி வருவதை கண்டேன்.

வழ: அவர் என்ன செய்தார்?- 1ம் எதிரியை இடுப்பில் பிடித்தார்.

வழ: அப்போது 2ம் எதிரியைக் கண்டீரா? [illegible] ரும் ஓடினர்கள் [illegible] இவரை அவதானிக்கவில்லை.

வழ: 1956ம் ஆண்டு 2ம் எதிரியை உமக்கு தெரியும்? இல்லை.

வழ: 1956ம் ஆண்டு கிராம சபைத் தேர்தலில் உமக்கெதிராக போட்டியிட்ட சிதம்பரனுக்கு சொந்தக்காரரான 2ம் எதிரி அவருக்கு உதவி செய்தாரா?- தெரியாது.

வழ: நீரும் அவரும் சண்டை பிடித்தீர்களா?- இல்லை.

வழ: 2ம் எதிரி பற்றி பொலிசில் ஏன் சொல்லவில்லை?- அவரது பெயர் தெரியாது. அவரைப்பற்றி அடையாளம் கேட்கப்படவில்லை.

வழ: 2ம் எதிரியுடன் முன் பகை உண்டா? இச்சம்பவத்துக்கு முன் இவரை எனக்கு தெரியாது. இவருடன் முற்பகையும் இல்லை.

அடுத்து மாவை ஆலய ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்களை குறுக்கு விசாரணை செய்த போது அவர் தெரிவித்ததாவது:

வழ: நீர் கோவிலில் என்ன பொறுப்பில் இருக்கிறீர்? ஆதினகர்த்தர்.

வழ: சுந்தரலிங்கம் என்ன பொறுப்பில் இருக்கிறர்? ஆலய உற்சவ பொறுப்பாளரும் வழக்கறிஞராகவும்.

வழ: தேர்கள் யாருக்கு சொந்தம்? எனக்கு சொந்தமானவை.

வழ: எத்தனை தேருக்கு தீ வைக்கப்பட்டது? இரு தேர்களுக்கு.

வழ: தேர் எரிந்ததால் எவ்வளவு நஷ்டம்? இரு தேர்களும் எரிந்ததால் 20 ஆயிரம் ரூபா நஷ்டம். சண்டேசுவரர் தேர் கூரை எரிந்து பாவிக்க முடியாதநிலையில் உள்ளது. ஆறுமுகசாமி தேர் தீ வைத்ததால் பாவிக்க முடியாது.

வழ: தேரைத் திருத்த எவ்வளவு பணம் வேண்டும்? 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல்.

வழ: எப்போது செய்யப்பட்ட தேர்? என் தகப்பன் [illegible]

வழ: தேர் எரிவதை கண்டீரா? காணவில்லை. அம்மா வந்து தேர் எரிவதாக சொன்னது உடன்போக முடியாது இருந்தது 10 நிமிடத்தின்பின் போனேன்

வழ: அப்போது என்ன நடந்தது? பெருந் தொகை சனங்கள் கூடிநின்று நெருப்பு அணைத்து கொண்டிருந்தனர்.

வழ: சண்முகவடிவேலைக் கண்டீரா? இல்லை

வழ:பின் என்ன செய்தீர்? கோவிலுக்குள் அலுவலாக சென்றேன். பின் மாவிட்டபுரத்தில் இருந்த பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளித்தேன்.

வழ: சுந்தரரை சந்தித்திரா? இல்லை.

வழ: தேர் எரிந்ததால் என்ன நஷ்டம் ஏற்பட்டது? இது கிராமத்துக்கே அபசகுணமான செயல் ஆகும்.

வழ. சுந்தரரை எப்போது சந்தித்தீர்? சம்பவம் நடந்து ஒன்றரை மணித்தியாலத்தின் பின்.

வழ. உமது மகள் தேர் எரிந்ததை கண்டதாக உம்மிடம் கூறினரா? ஆம்.

வழ: 1-ம் எதிரியை உமக்கு தெரியுமா? தெரியாது.

வழ: 1968-ம் ஆண்டு சச்சரவு இருந்ததா? சிறுபான்மையோர் கரைச்சல் இருந்தது.

வழ: அப்போது சிறுபான்மையோருக்கு தலைமை தாங்கிய 1-ம் எதிரியைத் தெரியுமா? இல்லை

வழ: இவரை முன்பு கண்டீரா? இல்லை, இன்றுதான் காண்கிறேன்.

வழ: 53-ம் ஆண்டு சுப்பையா மாஸ்டருடன் நீர் நாகரத்தினத்தின் கடைக்கு போனீரா? இல்லை.

வழ: தேருக்கு கீழ் என்ன இருந்தது? கறையான் பிடிக்காது மணல்போடப்பட்டிருந்தது.

வழ: அருகில் தடிகள் இருந்தகா இல்லை

வழ: சுந்தரலிங்கத்தை எப்போது ஆலய பொறுப்பில் நியமித்தீரா? 68-ம் ஆண்டு

வழ: எப்படி வந்தார்? நேர்த்திக்கடன் நிறைவேற்றவந்தார். நான் இவ்விடயங்களை கவனிக்கசொன்னேன்.

வழ: 1969ம்ஆண்டு மாவிட்டபுரத்தில் நடந்த மகாநாட்டுக்கு போனீரா? இல்லை

வழ: அங்கு யார் நின்றுர்கள் என்று தெரியுமா? எல்லாரும் நின்றதாகக் கேள்விப்பட்டேன்.

வழ: மகாநாட்டுஒப்பந்தத்தில் கைசாத்து இட்டீரா? மகாநாட்டில் ஒப்பந்தம் வாசிக்கப்பட்டு ஒப்பம் போட்டேன்

வழ: சம்பவதினம் தேர்த் திருவிழா? ஆம்.


வழ: அன்று முதலாம் எதிரியை கண்டீரா? இல்லை

வழ: தேர் எரிவதைவிட ஆலய வேலை பெரிதா? நான் இல்லாவிட்டால் உபயகாரர் சம்மதிக்கமாட்டார்கள்.

வழ. தேர்எரிவதைவிட உபயகாரரை திருத்திப்படுத்துவது அவசியமானதா? நான் தேர் எரிவதைபார்க்கத் தேவையில்லை, ஆயிரம்பேர் நின்று தேவையை செய்தனர்,

வழ! நாகரத்தினம்தீவைத்ததாக இந்துமதி கூறியதாக உமதுமனைவி உம்மிடம் கூறினர்.? ஆம்

மேல் விசாரணை இம்மாதம் 18ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகர ஆசிரிய சங்கம் நடாத்திய

# பேச்சு, சங்கீத போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் நகர ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சு, சங்கீதப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**தமிழ்ப் பேச்சுப்போட்டி**

**ஆண்கள்**

மேற்பிரிவு- ரி சிவசெட்சணமூர்த்தி (யாழ் இந்து). எஸ் தேவராஜா (செங்குந்தா). ரி ஸ்ரீஸ்கந்தராஜா (செங்குந்தா)

மத்திய பிரிவு: பி ராஜூபதி (யாழ் இந்து) என் ஜெயலிங்கம் (மீசாலை வீரசிங்கம்). எஸ் குலேந்திரன் (வைத்தீஸ்வரா)

கனிஷ்டபிரிவு- ஏ இளைகுமார் (யாழ் இந்து). என் இராஜேந்திரம் (வைத்தீஸ்வரா). இ ஞானசம்பந்தன் (யாழ் இந்து)

பெண்கள்

அதி மேற்பிரிவு- ஏ லீலாவதி (சாவகச்சேரி இந்து). எஸ் இலகவதி (சாவகச்சேரி இந்து)

மேற்பிரிவு- எஸ் இந்திராணி (வைத்தீஸ்வரா). வி தனலக்ஷ்மி (மீசாலை வீரசிங்கம்). கே செல்வராணி (சாவகச்சேரி இந்து)

மத்திய பிரிவு- எம் புஷ்பராணி (செங்குந்தா) எஸ் ஜுபின் (வைத்தீஸ்வரா), கே பரமேஸ்வரி (கொழும்புத்துறை மகாவித்தியாலயம்)

கனிஷ்ட பிரிவு- கே சாந்தினி (சாவகச்சேரி இந்து). எம் நளாயினி (சாவகச்சேரி இந்து), பி ரேமோ (முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), சிகிரிதா (சாவகச்சேரி இந்து)

**ஆங்கிலம்**

**ஆண்கள்**

மேற்பிரிவு- பி ரவீந்திரன் (யாழ் மத்திய கல்லூரி). எஸ் குகதாசன் (வைத்தீஸ்வரா). எஸ் தம்பித்துரை (வரணி மகாவித்தியாலயம்)

மத்திய பிரிவு- சி சங்கரன் (யாழ் இந்து). ஈ யோகேஸ்வரன் (யாழ் இந்து) பி எஸ் இராஜரத்தினம் (ஜே சி சி), பி ஜீவநாதன் (யாழ் இந்து)

கனிஷ்ட பிரிவு- ஆர் அகிலன் (யாழ் மத்திய கல்லூரி). ஜி பாஸ்கரன் (யாழ் மத்திய கல்லூரி) எஸ் சந்திரநாதன் (றிபேக் கல்லூரி).

பெண்கள்

மேற்பிரிவு- ஆர் யோகராணி வரணி மகாவித்தியாலயம்), ரி சுமதி (சாவகச்சேரி இந்து), எஸ் வத்மினி (முத்துத்தம்பி மகாவித்தியாலயம்)

மத்திய பிரிவு- லலிதா அல்ரனி (கனகரத்தினம் மமவி). ஆர் நிர்மலாதேவி (சாவகச்சேரி றிபேக் கல்லூரி), பி துரை செல்வி (செங்குந்தா இந்து)

கனிஷ்ட பிரிவு-டி சியாமளா (சாவகச்சேரி றிபேக்) ஆர் தெய்வச்செல்வி (கொழும்புத்துறை மகாவித்தியாலயம்). என் கிரிதா (சாவகச்சேரி இந்து)

**பாட்டு**

**ஆண்கள்**

கனிஷ்ட பிரிவு-தனியாக சந்திரன் (யாழ் இந்து). பி நந்தகுமார (கொண்டாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை) கே குமரச்சந்திரன் (செங்குந்தா)

மேற்பிரிவு- தனியாக: கே செல்வராஜா (வரணி மகாவித்தியாலயம்). பி ஆனந்தபிரசாத் (யாழ் மத்திய)

கனிஷ்ட பிரிவு-கோஷ்டி: யாழ் இந்துக்கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி பரமேஸ்வராக் கல்லூரி

மேற்பிரிவு- கோஷ்டி: வரணி மகாவித்தியாலயம், யாழ் மத்திய கல்லூரி

பெண்கள்

கனிஷ்ட பிரிவு-தனியாக: எம் புஷ்பராணி (றிபேக் கல்லூரி). எஸ் பராசக்தி (பரமேஸ்வரா). ஜி சகுந்தலாதேவி (செங்குந்தா)

மேற்பிரிவு- தனியாக: என் கிருஷ்ணவேணி கனக. மகாவித்தியாலயம்). எஸ் சிவனேஸ்வரி (செங்குந்தா) எஸ் தேவமலர் (வரணி மகாவித்தியாலயம்)

கனிஷ்டபிரிவு - கோஷ்டி: வரணி மகா வித்தியாலயம், செங்குந்தா இந்துக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி.

மேற்பிரிவு- கோஷ்டி: சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், கொண்டாவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை

......


## கையிருப்பில் கிடைக்கும்


வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்

★ குறைந்த இயக்கச் செலவு

★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்;

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி ரோட்; யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. இ. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


## இரு போட்டிகள்

அம்பன், வியாழன்

வடமராட்சி வடக்குக் கிழக்குப் பகுதி சரவந்தாட்ட மென்பந்துக் கிரிக்கட்போட்டி முடிவுகள் வருமாறு:

அல்வாய் சிவானந்தாவுக்கும் அல்வாய் புவசக்திக்கும் இடையில் நடைபெற்ற சரபந்தாட்டப் போட்டியில் புவசக்தி வெற்றியீட்டியது.

வல்வை சிகம்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் அல்வாய் உதய தாரகை விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கட் போட்டியில் உதய தாரகை வெற்றியீட்டியது. மேற்படி போட்டிகளுக்கு வி. செல்வராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 12—3—71**

(செய்திகள்: காலை 6-45 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீ. அலை 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை. 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 அதிப்பாடல்கள், 7-15 பண்ணரித்தமிழ். 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இன்னிசை விருந்துகள்.

**844 மீ. அலை 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**844 மீ. அலை 61 மீ.**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு. 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6 30 அதிப்பாடல்கள், 7-00 பேச்சு, 7-15 பாட்டு, 7-45 [illegible] 8-00 [illegible] 9-30 பேச்சு, 10-00 நாதசுரம், 10-30 செய்தித்தொகுப்பு.

## விளையாட்டுப் போட்டி பற்றி ஜெயக்கொடி எம்.பி.கருத்து

உடுப்பிட்டி, வியா.

சிறுபிள்ளைகள் இளம் பராயத்திலிருந்தே நல்ல பழக்கங்களைபழகிக்கொள்ள வேண்டும். விளையாட்டுப் போட்டிகள் மாணவர்கள் மத்தியில் பரஸ்பர நல்லெண்ணத்தையும், நட்புறவையும் வளர்க்கும் சாதனங்களாக விளங்குகின்றன. விளையாட்டு வெறும் விளையாட்டாக இருக்கக்கூடாது. வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளையும், சகிப்புத் தன்மையையும் இத்தகைய போட்டிகள் மூலமே பெற்றுக்கொள்ளலாம்' என உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி கூறினார்.

உடுப்பிட்டி வட்டாரத்தைச் சேர்ந்த 27 பாடசாலைகள் பங்குபற்றிய இம் மெய்வல்லுநர் போட்டி நெல்லியடி மத்தியமகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் திரு. என். ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. கு. இராசையா. உடுப்பிட்டிப் பாடசாலைத் தலைவர்கள் சங்கச் செயலாளர் திரு. ஆ. க. மாணிக்கம் ஆகியோரும் பேசினர்.

திருமதி பி. ஜெயக்கொடி போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். உடுப்பிட்டி மகளிர்கல்லூரி மாணவிகளின் மாண்பிசையும் இடம்பெற்றது.

கிரிக்கெட்

## குருநாகல் வெற்றியுடன் திரும்பியது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், குருநாகல் இப்பகமூவா கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் குருநாகல் கல்லூரி 4 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெற்றது.

சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் 170 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 140 ஓட்டங்களையும் பெற்றது குருநாகல் முதல் இன்னிங்ஸில் 206 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 105 ஓட்டங்களையும் பெற்றது.

குருநாகல் கல்லூரியின் வீரர் ஹெட்டியாராச்சியின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இவர் முதல் இன்னிங்ஸில் 76 ஓட்டங்களைப் பெற்றார். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் காப்டன் அருளானந்தமும் சிறப்பாக ஆடுப்பெடுத்தாடி 46 ஓட்டங்களைப் பெற்றார். போட்டி மிக விறுவிறுப்பாக அமைந்திருந்தது. (தே நி)

......

## பரிசளிப்புப் போட்டி

அம்பன், வியாழன்

இலங்கை இரும்புக் கூட்டுஸ்தாபனம் பரிசளிப்புப் பெட்டிகளை பனை ஓலைகளிலும் வேறு உள் நாட்டு மூலப்பொருட்களிலும் செய்வதற்கு ஆலோசித்து வருகின்றது. பனை ஓலையில் செய்யப்பட்ட மேற்படி மாதிரிப் பெட்டிகள் சிலவற்றை அனுப்பிவைக்குமாறு இக் கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டுள்ளது.

## இன்று சீட்டிழுப்பு

கொழும்பு, வெள்ளி

தேசிய லொத்தர் சபையினரின் 339 வது தேசிய சுவீப் இழுப்பு இன்று 12ம் திகதி மாலை 5 15 மணிக்கு தேசிய லொத்தர் சபைக் காரியாலயத்தில் நடைபெறும் பரிசுபெறும் டிக்கட்டுக்களுக்கு இம்மாதம் 16ம் திகதி அதற்குரிய பரிசுத் தொகை மேற்படி காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

......

உதைபந்தாட்டம்

## புளூஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தால் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும், உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'பி' பிரிவில் வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகம் 3—1 கோல்களால் யாழ் றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (தே நி)

— —

சென். ஜோன்ஸ்

## இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

சென். ஜோன்ஸ் முதல் இன்னிங்ஸில் 135 ஓட்டங்களைப் பெற்றது ஹாட்லிக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 22 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 112 ஓட்டங்களையும் பெற்றது.

இப்போட்டி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே நி)

## சிறுதொழில்கள் ஆரம்பிப்பர்

சுழிபுரம், வியாழன்

தொல்புரம் கிராமத்தில் சிமெந்தைக் கொண்டு சிறு சிறு தொழில் விருத்திகள் கிராம அபிவிருத்தியினரால் ஆரம்பிக்கப்படவுள்ளன. சக்கூஸ்கற்கள், சிமெந்து ஓடுகள். மேசைகள், கூஜாக்கள் போன்ற வேலைகளை சபை மேற்கொள்ளவிருக்கிறது.

......

## எழுச்சி விழா

மாவிட்டபுரம், வியா.

தமிழரசுக்கட்சியின் தமிழரசு எழுச்சிவிழா ஒன்று அளவெட்டியில் இம்மாதம் 27ம் திகதி நடைபெற இருக்கிறது. இவ் விழாவில் தமிழரசுக் கட்சியின் 13 எம். பி. க்களும் மற்றும் கட்சியைச் சேர்ந்த பலரும் பங்குபற்றுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகா ராஜேந்திரன் மீது கல்வீச்சு; தி.மு.கழக மாணவன் படுகொலை

## பரங்கிமலையில் தடை உத்தரவு

(நமது சென்னை நிருபர்)

சென்னை, மார்ச் 11

தேர்தல் தகராறு காரணமான பூண்டி புஷ்பம் கல்லூரியில் பி.ஏ 2-ம் ஆண்டு படித்துவந்த 21 வயது வாலிபரான கண்ணையன் என்பவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவர் தி மு கழக கூட்டணிக்கு ஆதரவாக தேர்தலில் பிரசாரம்செய்தார் என்று கூறப்பட்டது.

**நடிகர் மீது கல்வீச்சு**

மதுரை மாவட்டத்தில் நடிகர் எஸ் எஸ் ராஜேந்திரன் தேர்தல்பிரசாரம் செய்தபோது ஒரு கோஷ்டியினர் கல்வீசியதால் பலத்த காயமடைந்தார். நடிகர் ராஜேந்திரனை நோக்கி கத்தியுடன் பாய்ந்த ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர். அலங்காநல்லூரிலிருந்து பாலமேடு நோக்கி அவர் காரில் சென்றுகொண்டிருந்தபோது ஒரு கோஷ்டியினர் காரை மறித்து கூட்டத்தில் பேசக்கூடாது என்று மிரட்டியிருக்கிறார்கள் உடனே எஸ். எஸ். எஸ் ராஜேந்திரன் திட்டமிட்டபடி கூட்டத்தில் பேசியே தீருவேன் என்று கூறினார் கார் புறப்பட்டதும் அவரது காரை நோக்கி கற்களை வீசினார்கள், இதனால் ராஜேந்திரனின் காரும் வேறு இரு கார்களும் சேதமடைந்தன. கல்வீச்சின்போது ராஜேந்திரனின் உதடு கிழிந்தது. அவரது 5 வயது மகன் செல்வராஜாவுக்கும் காயம் ஏற்பட்டது. காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள்

எஸ். எஸ். ராஜேந்திரன் கூட்டத்தில் இரத்தம் சொட்டச் சொட்டப் பேசினார். அப்போது மேடையில் ஒருவர் கத்தியுடன் ஏறி அவரை நேர்க்கிப் பாய்ந்தார். பொலிசார் அவரை கைதுசெய்தனர்.

தமிழ்நாட்டில் மீண்டும் தி. மு. முகமே ஆட்சிக்கு வரும். இதில் எவ்வித சந்தேகமும் வேண்டியதில்லை என்று பாண்டிச்சேரி முதல்மந்திரி பரூக்சாயர் நேற்று கூறினார். டெல்லியில் மீண்டும் இந்திரா அரசுதான் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் மீண்டும் கழக ஆட்சியே அமையும் என முதல் அமைச்சர் கருணாநிதி நேற்று கூறினார்.

கம்பம் நகரில் மீண்டும் மோதல் ஏற்பட்டது. கத்தி அருவாளுடன் இரு கோஷ்டியினர் மோதிக்கொண்டதால் 130 பேர் காயமடைந்தனர்.

இந்தக்கலவரத்தில் கடைகள் சூறையாடப்பட்டன வீட்டு கதவுநிலைகளும், கதவுகளும் பெயர்த்து எறியப்பட்டன. சகாமண்டயாதேவர் என்பவர் கல்வீச்சினால் பலத்த காயமடைந்தார். அவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கம்பத்திலும், காமைய கவுண்டன்பட்டியிலும், பள்ளிகள். கடைகள் மற்றும் வியாபார நிலையங்கள் அனைத்தும்மூடப்பட்டன. இந்தக் கலவரத்தை தொடர்ந்து கடலூரிலும் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது, கடைகள் மூடப்பட்டுகிடக்கின்றன.

தேர்தல் முடிவுகள் வெளியாகும் நேரத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் பூரண அமைதிகாக்க வேண்டும் என்று சர்வகட்சி கூட்டத்தில் முடிவுஎடுக்கப்பட்டது. செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் சிதாராமதாஸ் இம்மகாநாட்டை கூட்டியிருந்தார்.

அக்கினிராஜ் என்பவரை கொலைசெய்ய முயற்சி நடத்தது சம்பந்தமாக சிண்டிகேட் காங்கிரஸ் வேட்பாளர் புதல்வர் கள் மீது புகார் செய்யப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம் பழைய தி மு கழக எம் எல் ஏ ஆன அக்கினராஜ் என்பவரை கொலைசெய்ய முயற்சித்ததாக புகர் செய்யப்பட்டுள்ளது.

**பறங்கிரமலையில் தடைஉத்தரவு**

எம் ஜி ராமச்சந்திரனின் பறங்கிமலையில் பொதுக்கூட்டங்கள் ஊர்வலங்கள் நடத்தக் கூடாதென பொலிசார் நேற்றுத்தடை உத்தரவு போட்டுள்ளனார். பல்லாவரம், குரோம் பேட்டை, மீனம்பாக்கம், தாம்பரம் ஆகிய பகுதிகளிலும் தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு இம் மாதம் 16ம் தேதி வரை நீடிக்கும்.

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த 30 வயதான முத்தம்மாள் என்ற பெண் தனது கணவன் இறந்த தினத்தன்று வாக்குப் போட்டார். தேர்தல் நடைபெற்ற தினம் இப்பெண்ணின் கணவர் திடீர் என இறந்துவிட்டார். இருந்தும் முததம்மாள் வாக்குப் போடத்தவறவில்லை கணவனின் சடலம் இடுகாட்டுக்கெடுத்துச் செல்லப்பட்ட பின் உடனடியாக வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்குப் போட்டார்

தி. மு. கழகமே மீண்டும் ஆட்சிக்குவரும் என்று சென்னையை சேர்ந்த பிரபல ஜோதிடரான மு. கு. பரமசிவம் என்பவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார் அவர் மேலும் கூறியதாவது: இப்போது விருச்சிகராசியில் செவ்வாய் ஆட்சி பெற்று உள்ளது. தைரியம் சுகம் ஆகிய வற்றிற்கு அதிபதியான சனிஸ்வரபகவான் மேஷராசியில் நீசம் பெற்றுள்ளார் குரு பகவான் ராஜ்யாக நிலையில் காணப்படுகிறார் இதுவே நீச பங்கராஜயோகம் என்பதாகும் இந்த கிரக நிலைகளை ஆராய்ந்துபார்க்கும் போது தி. மு. கழகமே மீண்டும் ஆளும் கட்சியாக வரும் வாய்ப்பு இருக்கிறது.

— —

### மக்கள் கமிட்டி பற்றி ஆலோசனை

உடுப்பிட்டி, வியாழன் மக்கள் கமிட்டிக்கு வட்டார ரீதியாக உறுப்பினர்களைத் தெரிவுசெய்வது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இவ்வாலோசனைக் கூட்டத்தை ஒழுங்கு செய்த உடுப்பிட்டி எம் பி திரு கே ஜெயக்கொடி மக்கள் கமிட்டி சம்பந்தமாக விளக்கிப்பேசினார்.

— —

### நீரில் மூழ்கி மரணம்

பாலமுனை, வியா. குளத்தில் நீராடச்சென்ற 7வயதுச் சிறுவன் ஆ காசிம் நீரில் மூழ்கி மரணமானான்.

நிந்தவூர் தொகுதியைச் சேர்ந்த பாலமுனை கிராமத்தில் இது நடைபெற்றது. இம்மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு க தேவநாயகம் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம்எனத் தீர்ப்பளித்தார்,

—...

### இந்தியா ...

(6-ம்பக்கத்தொடர்ச்சி)

இந்தியாக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 125 ஓட்டங்களைப் பெற்று, 7 அதிகப்படியான விக்கெட்டுகளால் மேற்கிந்தியக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இந்தியக் கோஷ்டியில், துடுப்படி வீரர் சர்தேசாய், பந்துவீச்சு வீரர் பிறஸ்சன்னா மேற்கிந்தியக் கோஷ்டியில் ஆரம்ப துடுப்படி வீரர் பெற்டறிக் ஆகியோரது ஆட்டங்கள் சிறந்து விளங்கின.

ஸ்கோர் விபரம்: மேற்கிந்தியக் கோஷ்டி 1-வது இன்னிங்ஸ் 214, 2-வது இன்னிங்ஸ் 261.

இந்தியா: 1-வது இன்னிங்ஸ்: 352, 2-வது இன்னிங்ஸ்: 125 — 3.

### வேல்ஆனந்தன்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திருச்செல்வம் பேசுகையில் இக்காலத்தில் அசலுக்கும் நகலுக்கும் வித்தியாசம் தெரிவில்லை. ஓரிரண்டு மாதங்கள் இந்தியாவில் சென்று நாட்டியம் பயின்றுவிட்டு அரங்கேற்றமும் வைத்து விட்டால் உடனே எல்லோரும் கலைஞர்கள் ஆகிவிடுவதில்லை என்றார்.

கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் பஸ்மாசுரன் நாட்டிய நாடகமும் இடம் பெற்றது.


கடைசி வாரம்

வின்ஸர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - பத்மினி - சோ நடித்த ஜெமினியின்

விளையாட்டுப் பிள்ளை

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சிவாஜி கணேசன் ஜெயலலிதா நடித்த

எங்கிருந்தோ வந்தாள்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர் - லெட்சுமி முத்துராமன் - நிர்மலா நடித்த

வீட்டுக்கு வீடு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்

ராமராவ் — சிவகுமார் நடித்த

மாய மோதிரம்

கெப்பிட்டல் (கொழும்பு)



சிவாஜி காஞ்சனா எம்.என். நம்பியார் நாகேஷ் முத்துராமன் இன்னும் பலர் நடித்த



சிவந்த மண்

நாகம்ஸ் சினிமா கன்னாகம்

தினசரி 6-30 9-30 போயாநாட்கள் 2-30

எம். ஜி. ஆர்.-ராஜகுமாரி நடித்த

குலேபகாவலி

3வது வாரம்

வெஸ்லிசினிமா மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

ஏ.வி.எம் ராஜன்-சாரதா நடித்த

துலாபாரம்

ஸ்ரீ காலிங்கன் இணுவில்

தினசரி 6-30, 9-30 போயா நாட்கள் 2-30

எம் ஜீ. ஆர். - பத்மினி நடித்த

விக்கிரமாதித்தன்

REGAL - Jaffna

Daily 3 shows

Poya days 4 Shows

THE OLYMPICS IN MEXICO

MANOHARA Jaffna

Daily 4-45, 7-00&9-45p m.

Poya days 4 shows

Kyle Jhonson - Alex Clarke

in

"THE LEARNING TREE"

(Technicolor - Panavision)


### மரண அறிவித்தல்

V. I. பீரிஸ்

திரு. V. I. பீரிஸ் (பங்காளர், டன்லப் ஸ்ரோர்ஸ், பீரிஸ் மோட்டார்ஸ்) அவர்கள் 11-3-71 ல் காலமாகிவிட்டார்கள். இவர் செலின் அம்மாளின் அன்புக் கணவரும், மேரி, தத்துவம், ஜாந்தார்க். டேவிட், ரோஸலின், எலிசபெத். வதனி, ரெஜினாவின் அன்புத் தந்தையும், செல்வராயன் வாஸ், ரொசாரி பீரிஸ், சேவியர் ரொட்டிரிகஸ் அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூத உடல் நல்லடக்கத்திற்காக சென் மேரிஸ் அடக்கஸ்தலத்திற்கு 12-3-71 பிற்பகல் 4 30 க்கு 234, 236, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும். 2198

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரங்கிமலையில் எம். ஜி. ஆர்.

# 24,632 மேலதிகம்

சென்னை, மார்ச் 11

பறங்கிமலைத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரான எம். ஜி. ராமச்சந்திரன் 24,632 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார். இத் தொகுதியில் 3பேர் போட்டி யிட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம். ஜி. ராமச்சந்திரன் 64,405 வாக்குகளைப் பெற்றூர். காமராஜர் காங்கிரஸைச் சேர்ந்த ரி என் ரகுபதி 40,773 வாக்குகளைப்பெற்றூர் சுயேச்சையாகப் போட்டியிட்ட வரதராசா 850 வாக்குகள் பெற்றூர்.

**பறங்கிமலைத் தொகுதி வாக்களிப்பு விபரம்**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 1,63,257 |
| பதிவான வாக்குகள் | 1,10,067 |
| எம் ஜி ராமச்சந்திரன் | |
| தி மு க | 65,405 |
| ரி என் ரகுபதி | |
| கா காங்கிரஸ் | 40,773 |
| வரதராஜன் | |
| சுயேச்சை | 850 |
| பழுதானவை | 3 039 |



## யாழ். நகரில் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

திராவிட முன்னேற்றக் கழக தலைவரும் முதல் அமைச்சருமான திரு. மு. கருணாநிதி திரு. எம். ஜி ராமச்சந்திரன், பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆகியோரின் வெற்றி அறிவிக்கப் பட்டதும் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் வெடி கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

கொடிகாமம் சாவகச்சேரி சந்திகளிலும் மற்றும் பல இடங்களிலும் திராவிடமுன்னேற்றக்கழகக்கொடிபறக்க விடப்பட்டுள்ளது எம். ஜி. ஆர் மன்றத்தினர் சார்பில் இக்கொடிகள் பறக்கவிடப் பட்டுள்ளது.

## தலைவர்கள் படுதோல்வி

இந்திரா அமைச்சரவையில் உறுப்பினர்களாய் இருந்த பலமுக்கிய அமைச்சர்களும் வெற்றிபெற்றுள்ளார்கள். அதேசமயம் சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர்களில் முக்கியமானவர்களும் சுதந்திராகாங்கிரஸ் தலைவர்களில் முக்கியமானவர்களும் படுதோல்வியடைந்திருக்கிறூர்கள்.

லோகசபையில் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த சிண்டிகேட் தலைவர் ராம்சுபாக் சிங்கும், ராஜ்யசபையில் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த எஸ் என். மிஸ்ராவும் தோல்வியடைந்திருக்கிறூர்கள்.

பிரபல தொழில் அதிபரான டாட்டா வெற்றி பெற்றிருக்கிறூர். அதேசமயம் இன்னொரு தொழில் அதிபரான பிர்லா தோல்வியுற்றிருக்கிறூர் முன்னுள் ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கே. எம் கரியப்பா பம்பாயில் தோல்வியுற்றிருக்கிறூர் சுதந்திரா கட்சி டிக்கட்டில் போட்டியிட்ட அவர் ஜெ ஜீவன்ராம் வேட்பாளரிடம் தோல்வியுற்றூர்

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி தமது ரேபரேலிதொகுதியில் ஒரு லட்சம் வாக்குகளுக்கு மேல் பெற்று அமோக வெற்றி பெற்றூர். மத்திய அமைச்சர்கள் சவான், தினேஷ்சிங், கே. எல். ராவ், பக்ருதீன் அலிஅகமத். கடில்கர், ரகுராமையா ஆகியவர்களும் வெற்றிபெற்றுள்ளனர்.

உத்தரபிரதேசத் சிண்டிகேட் தலைவர் சரண்சிங் தோல்வியுற்றூர். சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித்தலைவர் மதுலிமாயும் தோல்வியுற்றிருக்கிறூர்.

இந்திரா காங்கிரஸ் கட்சி மகாராஷ்டிர மாநிலத்திலேயே பெரும்பான்மையான வெற்றிபெற்றிருக்கின்றது. 45 தொகுதிகளில் 42 இடங்களை இந்திராகாங்கிரஸ் இங்கு கைப்பற்றியுள்ளது உத்தரப்பிரதேசத்தில் வெளியான 64 முடிவுகளில் 56 இடங்களையும், பிகாரில் வெளியான 34 முடிவுகளில் 23 இடங்களையும். ஆஸாமில் வெளியான 5 தொகுதிகளில் 4 இடங்களையும் இந்திராகாங்கிரஸ்கட்சி கைப்பற்றியுள்ளது. ஜனசங்கம் மத்தியப் பிரதேசத்தில் 9 இடங்களைக் கைப்பற்றியது. ராஜஸ்தானில் கடந்தமுறை 2 இடங்களைமட்டும் பெற்றிருந்த இக்கட்சி இம்முறை 4 இடங்களைப்பெற்றிருக்கின்றது.

இன்று பிற்பகல் இரண்டு மணிவரை வெளிவந்த லோகசபை தேர்தல் முடிவுகளின் படி வார்பாஹ் தொகுதியில் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த வேட்பாளரே மிகவும் அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றூர்! ஜே ஜி சுதம் என்ற இந்த வேட்பாளருக்கு 2 லட்சத்து 49 ஆயிரம் வாக்குகள் கிடைத்துள்ளன.

ஆந்திராவில் சுதந்திராக் கட்சித் தலைவர் ரங்காவின் மனைவி ஆங்கோல் தொகுதியில் தோல்வியுற்றூர். இவரை பி. ஏ. பிரசாத் ராவ் என்பவர் தோற்கடித்தார்.

## முழுமனதுடன்.—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறது. இன்று நாட்டிலமைந்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டமே பெரும் பிரச்னையாக இருக்கிறது இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நாம் எமது அரசியல் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமா என்பதை சிந்திக்க வேண்டும் தனி மனிதர்களின் அடிப்படைஉரிமைகளை சாசனத்திலிருந்து நீக்கப் போவதில்லை நாம் சொத்துடமைக்கு எதிரானவர்களுமல்லர் ஆனுல் இந்த நாட்டிலிருந்து ஏழ்மையை போக்கி சுபீட்சத்தைக் காணவேண்டும். இதற்காக எமது கட்சி பல நடவடிக்கைகளை எடுத்தது அவற்றில் பல நடவடிக்கைகளை நீதிமன்றம் தடுத்து விட்டது ஆனுல் இந்த நாட்டில் வாழும் மக்கள் முழு ஆதரவையும் எமது கட்சியின் கொள்கைக்கு அளித்திருக்கிறூர்கள்

தனிப்பட்ட சிலர் தம் சொந்தப் பலத்தினுல் வென்றிருக்கிறூர்களா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு கட்சியின் கொள்கைக்கே மக்கள் வாக்களித்துள்ளனர் ஆனுல் சில இடங்களில் அப்படியும் நடந்திருக்கலாம் என்றூர்

---

## ரங்கா, ரெட்டி படுதோல்வி!
## கிருஷ்ணமேனன் வெற்றி

புதுடில்லி மார்ச் 11

நடைபெற்று முடிந்த லோகசபைத் தேர்தலில்பல பெரிய தலைவர்கள் தோல்வி அடைந்துள்ளனர். சுதந்திரக்கட்சித் தலைவர் பேராசிரியர் என். ஜி ரங்கா தோல்வியடைந்துள்ளார். இவரை ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரஸைச் சேர்ந்த வி. கே. ராஜகோபால்ரெட்டி 1,44,000 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார்.

நிஜலிங்கப்பா காங்கிரஸைச் சேர்ந்த திரு சஞ்சீவ ரெட்டியை ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரஸைச் சேர்ந்த திரு அந்தோனி ரெட்டி 89,000 அதிகப்படி வாக்குகளால் தோற்கடித்தார்.

### மேனன் வெற்றி

கேரள மாநிலத்திலுள்ள திருவனந்தபுரம் தொகுதியில் முன்னுள் பாதுகாப்பு அமைச்சர் திரு வி. கே. கிருஷ்ணமேனன் வெற்றி பெற்றுள்ளார்.

மஞ்சேரித் தொகுதியில் முஸ்லிம்லீக் தலைவர் திரு முகமது இஸ்மாயில் வெற்றி பெற்றூர் மத்திய விமானத்துறை அமைச்சர் திரு கரன்சிங் காஷ்மீரிலுள்ள அநன்பூர் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்.

டில்லியிலுள்ள 7 லோக்சபா தொகுதிகளிலும் ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்

கேரளா மாநிலத்திலுள்ள 19 லோக்சபா முடிவுகளும் தெரிவிக்கப்பட்டுவிட்டன இதில் 16 இடங்களை ஜகஜீவன்ராம் காங்கிரசும் ஆளும் கட்சியும் கைப்பற்றியுள்ளது.

### தி. மு. க. பறித்த இடங்கள்

சென்னை, மார்ச் 11

ஏற்கனவே வெளிவந்த முடிவுகளின்படி தி மு க வெற்றி பெற்ற 114 இடங்களில் 83 தொகுதிகள் தி மு க கையில் இருந்தவையே. புதிதாக நிஜலிங்கப்பாக் காங்கிரசிடமிருந்து 14 இடங்களையும், ஜகஜீவன்ராம் காங்கிரசிடமிருந்து 6 இடங்களையும், சுதந்திராவிடமிருந்து 8 இடங்களையும், மாக்ஸிஸ கம்யூனிசிடமிருந்து 8 இடங்களையும், போர்வாட், சுயேச்சை ஆகியவற்றிடமிருந்து தலா ஒவ்வொரு இடங்களையும் கைப்பற்றியுள்ளது.

இதற்கு மாருக தி மு க விடமிருந்த ஒரு தொகுதியை சுதந்திரா கைப்பற்றியுள்ளது.

## தி.மு. க....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்

### கோவிந்தன் வெற்றி

கலைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டசபையின் சபாநாயகர் புலவர் கோவிந்தன், துணைச் சபாநாயகர் எட்மன் ஆகியோரும் தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்

தி மு க ஆதரவுடன் தமிழரசுக்கழகசார்பில் போட்டியிட்ட தியாகராஜன் என்பவரும் வெற்றிபெற்றுள்ளார் தி மு க ஆதரவு தமிழரசுக் கழகத்தலைவர் ம பொ சி முடிவு அறிவிக்கப்படவில்லை லோக்சபா தேர்தலில் திரு ஏ. கே. கோபாலன் வெற்றி பெற்றுள்ளார். அவரது மனைவி கோபாலன் தோல்வியடைந்துள்ளார்.

கலைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சிண்டிகேற் திரு கருத்திருமனை தி.மு.க.சுப்பிரமணியம் என்பவர் தோற்கடித்துள்ளார்.

தி மு. க பிரமுகர் திரு ஏ வி. பி. ஆசைத்தம்பி தோற்றுப் போனூர்.

### நள்ளிரவு 12 மணி வரை

நேற்று நள்ளிரவு 12 மணி வரை 359 லோக்சபா முடிவுகளும், 167 தமிழ்நாடு சட்டப் பேரவை முடிவுகளும் அறிவிக்கப்பட்டன லோக்சபா முடிவுகளின் திருமதி இந்திராகாந்தியின் காங்கிரஸ் 273 தொகுதிகளிலும், தி மு க 138 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது தி மு க ஆதரவான தமிழரசுக் கழகம் ஒரு தொகுதியில் வெற்றி பெற்றதால் தி மு கவுக்கு 139 கிடைத்திருக்கிறது இந்திரா காங்கிரஸ் லோக்சபாவுக்கு அறுதிப் பெரும்பான்மையையும், தமிழ்நாட்டில் தி மு க அறுதிப் பெரும்பான்மையையும் பெற்றுள்ளது

---

## துரையப்பா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெடிவைத்து தகர்க்கப்பட்ட காரின்மேல்பகுதிமுற்ருகச் சேதமடைந்து இருபிரிவாகப் பிளந்து வீதியில் இருக்கக் காணப்பட்டது.

இச்சம்பவப் நடைபெற்ற தின சிறிது நேரத்தின்பின், யாழ்ப்பாணம் பொலிசார் சம்பவம் நடைபெற்றஇடத்திற்குச் சென்று வீதியை பொதுசனத்தின் பாவனைக்கு விடாது தடைசெய்துள்ளனர்

பொலிசார் இச்சம்பவம் பற்றி விசாரணைசெய்து வருவதாகவும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் பொலிசார்தெரிவித்துள்ளனர். [தே நி]

## வெடிவிபத்தில் மூவர் பலி!

கொழும்பு, வியாழன்

டெடிகம தொகுதியில் இன்றுகாலை நடந்த வெடிவிபத்தில் மூவர் மாண்டனர் மூவர் உயிரோடு போராடுகின்றனர், ஸ்தலத்தில் இருவர் பலியுண்டனர். ஒருவர் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின்னர்மரணமானூர், மற்றமூவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்-

---

## 2-வது கிரிக்கெட் டெஸ்ரில்
# இந்தியா வெற்றி!

ஜமேக்கா, மார்ச் 11

இந்தியாகிரிக்கெட் கோஷ்டிக்கும், மேற்கிந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியாக் கோஷ்டி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இந்தியாக் கோஷ்டி 1948-ம் ஆண்டுக்குப் பின் மேற்கிந்தியத்தீவில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

இன்றைய ஆட்டத்தில் மேற்கிந்தியக் கோஷ்டி மொத்தம் 261 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டி 1 விக்கெட்டை இழந்த போது 137 ஓட்டங்களைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

(5ம் பக்கம் பார்க்க)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ந் திகதி வெளியிடப்பட்டது.

## கலைவிழா

மாவிட்டபுரம், வியா.

கம்பன் கலைக்கழக ஆதரவில் மாபெரும் கலைவிழா இன்று இரவு நடைபெற்றது.

## இரத்மலானையில் விமானம் தீப்பற்றியது

கொழும்பு, வியா

இரத்மலானைவிமான நிலையத்தில் இன்று நடந்த விமான விபத்தொன்றில் விமானத்தில் இருந்த இருவருமே மாண்டனர். பயிற்சி விமானமொன்றே இக் கதிக்குள்ளானது.

விமானமோட்டியுடன் இன்னொருவருமே விமானத்திலிருந்தார்கள்,

விமானம் இருதடவை ஒடி எழும்ப முயற்சித்தது. அப்போதே விமானம் திடீரென்று தீப்பற்றி எரிந்து விழுந்து நொறுங்கியது. இருவரும் மாண்டார்கள்.

(சி.பி.ஏ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org